# ஒப்புக் கொடுத்தோரின் பதிவேடு

*நடபடிகள் என்பது மாற்றத்தின் புத்தகமாகும். இது முடிவுவை மேற்கொள்ளுதல், இயேசுவின் அழைப்புக்கு "இப்பொழுதே கீழ்ப்படிதல்" அல்லது புறக்கணித்தல் என்பதற் கான ஒரு காலம் ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளது. இது பதில்களுக்கான அப்போஸ்தலர்களின் தொடர்ந்த நாட்டத்தை யும் தேவனுடைய கிருபையின் ஈர்ப்பு சக்திக்கு ஆண்களும் பெண்களும் பதில்செயல் செய்ய வேண்டும் என்று அவர்களின் வேண்டுகோளையும் வெளிப்படுத்துகின்றது. இயேசுவின் வரலாறானது தீர்க்கமான மற்றும் உடனடியான மாற்றங் களுக்கு அழைத்தது என்ற சத்தியத்தை இதன் வாசகர் அதிரடியாக உணருகின்றார்.*

*இப்புத்தகமானது எந்த ஒரு இடைப்பட்ட ஆதார நிலையையும் - முடிவெடுக்கத் தாமதிப்பவருக்குப் பாதுகாப் பான இடத்தையோ, சந்தேகப்படுபவருக்கு ஆறுதலையோ, சாலை நடுவிலான தீர்வுக்கு முயற்சி செய்பவருக்குப் பரிதாபத்தையோ கொடுப்பதில்லை. ஒவ்வொரு வரலாறுமே, உறுதியான ஒப்புக் கொடுத்தல் அல்லது புறக்கணித்தல் என்பதையே கூறுகின்றது, சில வேளைகளில் கோபமான புறக்கணிப்பு கூட பிரசங்கியாருக்கு உபத்திரவமாகத் திரும்பி யது. இது, "என்னோடே இராதவன் எனக்கு விரோதியா யிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" (மத். 12:30) என்று இயேசு கூறிய பலத்த கூற்றின் எச்சமாய் இருக்கின்றது.*

## முதல் சீஷர்களின் ஒப்புக் கொடுத்தல்

*இயேசுவின் வாழ்க்கையில் உச்சகட்டத்தின்போது,*

*அப்போஸ்தலர்கள் பலவீனமானவர்களாக, குழப்பம் அடைந்தவர்களாக, உறுதியின்றி ஊசலாடுபவர்களாக மற்றும் சில வேளைகளில் கோழைகளாகக் கூட இருந்தார்கள். தோட்டத்தில் இயேசு கைது செய்யப்பட்ட வேளையில் அவர்கள் எல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள் (மத். 26:56; மாற். 14:50), பேதுரு தூரத்திலே அவருக்குப் பின் சென்றார் (மாற். 14:54; லூக். 22:54), ஆனால் பின்பு அவரை அறிந்திருந்ததை மறுத்து, அவரைச் சபித்தார் (லூக். 22:60). யோவான் என்பவர் யோவான் 18:15, 16ல் குறிப்பிடப்பட்ட பெயர் தரப்படாத மனிதரானால், அவர் பிரதான ஆசாரியரால் அறியப்பட்டவராகையால், பிரதான ஆசாரியரின் வீட்டு முற்றத்தில் இயேசுவுடன் பிரவேசிக்கையில் மிகுந்த கவலையுள்ளவராய் இருந்தார். பின்பு அவர் வெளியே சென்று பேதுருவைத் தம்முடன் கூட்டி வந்தார். இருந்தாலும், அவர்கள் இருவருமே இயேசுவைத் தற்காத்ததாகவோ, இயேசுவைப் பற்றிய பிலாத்துவின் முடிவை மறுத்ததாகவோ குறிப்பிடப்படவில்லை. அவர்கள் இயேசுவின் சிலுவையை சுமக்க உதவி செய்யவுமில்லை, அவரின் சரீரத்தைப் புதைப்பதிலும் உதவி செய்யவில்லை (லூக். 23:50-53)!*

*இதே மனிதர்கள் பின்னாளில், இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி உள்ளார்ந்த மதிப்புடன், தைரியமாகச் சாட்சியளித்தார்கள், அதை அவர்கள் மாபெரும் வல்லமையுடன் செய்தார்கள் (அப். 4:33). உபத்திரவப்படுத்தப்பட்டபோது, அவர்கள் இயேசுவை கிறிஸ்து என்று தொடர்ந்து பிரசங்கிக்கத் தைரியத்திற்காய் ஜெபித்தார்கள், அதுவும் அவ்வாறு பிரசங்கிக்கக் கூடாதென்று கண்டனம் பண்ணப்பட்ட உடனே அவ்வாறு செய்தார்கள் (அப். 4:29). இயேசுவின் நாமத்தினால் எவ்வளவும் பேசக் கூடாது என்று அவர்களுக்குக் கூறப்பட்டது (அப். 4:18), ஆனால் அவர்கள் யூத அதிகாரிகளுக்குச் செவி கொடுப்பதைக்காட்டிலும் அதிகமாய் இயேசுவுக்குச் செவி கொடுத்தார்கள் (அப். 4:19, 20; 5:28, 29).*

*இந்த அப்போஸ்தலர்கள், மலைபோல் குவிந்த உபத்திரவங்களிலும் தொடர்ந்து உறுதியாய் நின்றார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டபோதிலும், தூதன் அவர்களை விடுவித்த பொழுது, தொடர்ந்து பிரசங்கித்தார்கள் (அப். 5:18-20). திரும்பவும் அவர்கள் சனதெரீன் சங்கத்தாருக்கு*

*முன்பாகக் கொண்டு வரப்பட்டு, கேள்வி கேட்கப்பட்டு, கடிந்து கொள்ளப்பட்டு, தண்டிக்கப்பட்டு கடைசியில் சட்டத் திற்குப் புறம்பாக சவுக்கால் அடிக்கப்பட்டார்கள் (அப். 5:27-40). அதற்குப் பிறகும் கூட, தேசத்தில் இருந்த உயர்நிலை யூதர்களால் ஏற்பட்ட பயங்கரமான, வெளியரங்கமான உபத்திரவம் மற்றும் புழுதி படிந்த எருசலேமின் தெருக்களில் தங்கள் முதுகுகளில் இரத்தம் வழிந்தோடச் சென்ற நிலையிலும் அப்போஸ்தலர்கள் தங்கள் சக கிறிஸ்தவர்களிடம் திரும்பி வந்து, இயேசுவின் நாமத்திற்காகத் தாங்கள் அவமானப்பட்டு, உபத்திரவம் அடையப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோஷம் அடைந்தார்கள் (அப். 5:41)! உயிர் போக்கும் பயம் கொடுத்த உபத்திரவங்களின் மத்தியிலும் கூட, முன்பு ஆட்டுக்குட்டி போலிருந்த இந்த மனிதர்கள் வீரமுள்ள சிங்கங்கள் போலாகி, ஒவ்வொரு நாளும், கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்ந்து பிரசங்கித்தார்கள் (அப். 5:42).*

*பெண்கள் அதிகமான அளவு மாறுபட்டவர்களாய் இருந்தார்கள்; ஏனெனில், பின்னணியில் அவர்கள் இருந்து கொண்டு, இயேசுவின் மரணத்திற்காக அழுது புலம்பிய பொழுதும் கூட, அவர்கள் மிகக் குறைவான அளவே உணர்வுப் பூர்வமான ஊசலாட்டத்தைக் காண்பித்தார்கள் (லூக். 23:27-31). அவர்கள் இயேசுவின் கல்லறையை அலங்கரித்தார் கள் (லூக். 23:55, 56), மற்றும் வாரத்தின் முதல் நாளில் அதிகாலையில் கல்லறையினிடத்திற்கு சென்றார்கள் (மத். 28:1). இயேசுவின் தாய் மரியாள், மகதலேனா மரியாள், சலோமி, யோவன்னாள் மற்றும் "இன்னொரு மரியாள்" (ஒருவேளை இவர் யாக்கோபின் தாயாக இருக்கலாம்) ஆகிய இந்தப் பெண்களே கல்லறை வெறுமையாயிருந்ததை முதலில் அறிந்தார்கள் (மத். 28:1; மாற். 16:1, 2; லூக்கா 24:10).*

*மத்தியா ஒரு அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சியின் போது, மேல் வீட்டில் இருந்த 120 சீஷர்களில் இப்பெண்களும் ஆர்வத்துடன் இருந்தார்கள் (அப். 1:14-26). ஆகையால், இயேசுவின் சீஷர்களுடன் இப்பெண்கள் எப்பொழுதும் கூடவே இருந்து, அவரது விசாரணை மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆகியவற்றின்போது அமைதி யுடன் ஆதரவாய் இருந்து, அவரது மரணம் மற்றும் அடக் கத்தை மென்மையாய்க் கவனித்துக் கொண்டார்கள் என்று*

*காணப்படுகின்றது. அவரது உயிர்த்தெழுதலுக்குப்பிறகு இவர்கள் முற்றிலும் நம்பகமான உறுதிப்பாட்டுடன் இருந்து, பேதுரு சிறைப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றில் பெண்களுக்கான விசேஷ ஜெபக் கூட்டத்தைக் கூட நடத்தினார்கள் (அப். 12:12).*

*அரிமத்தியாவூர் யோசேப்பு என்பவர் இயேசுவின் சரீரத்தைச் சிலுவையிலிருந்து பெற்று அதை அடக்கம் செய்தார். அவர் சனதெரீன் சங்க உறுப்பினராய் இருந்ததால், அவருடைய சீஷத்துவமானது முற்றிலும் வழக்கத்துக்கு மாறானதாயிருந்தது (லூக். 23:50). ஏனெனில், "யூதருக்குப் பயந்ததினால்" அவர் தமது விசுவாசத்தை ஒரு இரகசியமாகக் காத்தார் (யோவா. 19:38). இயேசுவின் சரீரத்தை அவர் பெற்றுக் கொண்டதென்ற வெளிப்படையான செயலானது இனி அவரது சீஷத்துவம் இரகசியமாய்க் காக்கப்படாதென்பதை உறுதிப்படுத்தியது. அடக்கம் செய்வதில் யோசேப்புக்கு உதவியாயிருந்த நிக்கொதேமு என்பவர் சரீரத்திற்கு அபிஷேகிக்க சுகந்த வர்க்கங்களைக் கொடுத்தார் (யோவா. 19:39, 40). அவரும் சனதெரீன் சங்க உறுப்பின ராகவும், ''யூதருக்குள்ளே அதிகாரி''யாகவும் இருந்தார் (யோவா. 3:1). இவ்விரு மனிதர்களும் இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்வதில் தைரியமாய் ஈடுபட்டதினால், இயேசு வுக்கு அவர்கள் தங்களை வெளிப்படையாக ஒப்படைத்த பிறகு சனதெரீன் சங்கத்திலும், யூதர்களின் சமூகத்திலும் அவர்களின் நிலைமையானது கணிசமான அளவில் மாற்றம் அடைந்திருக்கும்.*

*சிலுவையில் (இயேசு) அறையப்பட்டபின் ஆறு வாரங் களுக்கும் குறைவான காலகட்டத்தில் அந்த 120 சகோதர சகோதரிகளும் தொடர்ந்து ஒன்று கூடுவதற்கு உறுதியான பற்றைக் காண்பித்தார்கள் (அப். 1:15). அப்போஸ்தலர்கள் மற்றும் பெண்களுடன் இயேசுவின் சகோதரர்களும் அங்கிருந் தார்கள். இதற்கு முன் மரியாளின் மற்ற பிள்ளைகள், இயேசுவை மேசியாவாக விசுவாசித்திருந்ததில்லை. இயேசு அற்புதங்களைச் செய்து (மேசியா என்ற) தம் உரிமைகோரு தலைச் செய்ய கூடாரப் பண்டிகைக்குச் செல்லாதிருந்ததற்காக அவர்கள் அவரை ஏளனம் செய்திருந்தார்கள் (யோவா. 7:1-5). இந்த அரை சகோதரர்களில் ஒருவரான யாக்கோபு பின்னாளில்*

*சபையில் முக்கியத்துவம் வாய்ந்தவராகி, விருத்தசேதனப் பிரச்சனை பற்றி எருசலேமில் நடந்த கூட்டத்திற்குத் தலைமை ஏற்று நடத்தினார் (அப். 15:13). அவர் எருசலேம் சபையின் "தூண்" என்றும் குறிப்பிடப்பட்டார் (கலா. 1:19; 2:9, 12) மற்றும் அவர் புதிய ஏற்பாட்டு நிருபம் ஒன்றின் ஏவப்பட்ட எழுத்தாளராகவும் இருந்தார் (யாக். 1:1).*

*இயேசு கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட காலம் தொடங்கி, பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், விருவிருப்பான மாற்றங்கள் நிகழ்ந்தன. முன்பு சீஷர்கள் அலைபாயும் மனம் கொண்டிருந்தார்கள்; பிற்பாடு அவர்களெல்லாருக்கும் கர்த்தராகிய இயேசுவின்மேல் மாபெரும் பயம் (மரியாதை) உண்டாயிற்று (அப். 2:43). முதல் கிறிஸ்தவர்கள் விசுவாசம் மற்றும் நடைமுறைகளில் ஐக்கியத்தை செயல் விளக்கப்படுத்தினார்கள்; ஒருவருக்கொருவர் பரிவையும், போஷிக்கும் அன்பையும் காட்டினார்கள்; அவர்களின் ஆராதனையில் ஒன்றித்திருத்தலின் நெருங்கிய பிணைப்பும், ஐக்கியமும் இருந்தன (அப். 2:42-44). தங்களின் சக கிறிஸ்தவர்களின் தேவைகளை இதற்கு முன்னும் பின்னும் காணப்படாத அளவுக்குத் தியாகம் நிறைந்த வழிமுறைகளில் அவர்கள் நிறைவேற்றினார்கள் (அப். 2:44, 45; 4:32-35). எல்லாக் காலத்திலும் எதிரொலிக்கும் உறுதிப்பாட்டை விளைவாய் ஏற்படுத்தி ஏதோ ஒன்று அவர்களின் வாழ்வில் நடைபெற்றது.*

## மற்றவர்களின் ஒப்புக் கொடுத்தல்

*கிறிஸ்துவுக்குத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தவர்களாய் நடபடிகளில் காணப்படும் தைரியமான மக்கள் பலரை நாம் காணுவோம். லேவியனான பர்னபா சீப்புருதீவில் தனக்கொரு நிலத்தை உடைமையாகக் கொண்டிருந்தார்; ஆதி சீஷர்களுக்கு நிதி தேவைப்பட்ட போது, அவர் அந்த நிலத்தை விற்றுக் கிடைத்த பணத்தை தேவையில் இருந்தவர்களுக்கு விநியோகிப்பதற்காக அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்தார் (அப். 4:36, 37). தர்சுப் பட்டணத்து சவுல் பயங்கரமான உபத்திரவம் தருவதில் முக்கியமானவராய் இருந்ததால் அவரைக் குறித்து அஞ்சிய சகோதரர்களிடத்தில் பின்னாளில் அவர் (பர்னபா) அவருக்காக (சவுலுக்காக) பரிந்து பேசினார்*

*(அப். 9:26, 27). பர்னபா தனது வாழ்வு முழுவதையுமே பிரசங்கிப்பதற்காக ஒப்புக் கொடுத்தார் என்பது தெளிவு, ஏனெனில் முதலாம் பயணத்தில் அவர் பவுலுடன் இருந்தார் (அப். 13:2). அந்தப் பயணத்தின் முடிவில், விருத்தசேதனம் பற்றிய பிரச்சனையைக் கலந்துரையாடுவதற்கு பவுலுடன் எருசலேமில் அவர் இருந்தார் (கலா. 2:1); ஆனால் தவறான செயல்பாடுகளில் அவர் பேதுருவினால் இழுப்புண்டார். இதன் விளைவாக, அவர்களைக் கடிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் நம்பினார் (கலா. 2:13, 14). பர்னபா அந்தியோகியாவில் ஒரு முக்கியப் போதகராகவும் பிரசங்கியாராகவும் தொடர்ந்த தோடு (அப். 15:35), பவுலும் அவரும் பிரிந்த போதிலும் கூட அவர் (பர்னபா) மற்ற சில ஊழியப் பயணங்களை மேற் கொண்டார் (அப். 15:39). அவரும் கிறிஸ்துவுக்கென்று தம்மை ஒப்புக் கொடுத்தவராய் இருந்தார்.*

*மென்மையான வலிவாளராயிருந்த பிரசங்கியாரான ஸ்தேவான் கர்த்தருக்கென்று தம்மை தீவிரமாகவும், வீரத் துடனும் ஒப்புக் கொடுத்திருந்தார். அபாயகரமான முறையில் கலகம் விளைவித்த யூதர்களைக் குறித்து அவர் அஞ்சா திருந்தார்; அவர் தம் உயிரை இழக்கும் வேளையில், தம்மைக் கொலை செய்தவர்களுக்காக அவரால் ஜெபிக்க முடிந்தது (அப். 7:54-60).*

*சீஷர்கள் மத்தியில் புறக்கணிக்கப்பட்டிருந்த/கண்டு கொள்ளாது விடப்பட்டிருந்த சில கிரேக்க விதவைகளின் விசாரிப்புப் பணியை திருத்த உதவுவதற்குத் தேர்ந்து கொள்ளப் பட்ட விசேஷித்த ஊழியர்கள் ஏழு பேரில் பிலிப்புவும் ஒருவராய் இருந்தார் (அப். 6:1-5). பின்னாளில் அவர் எருசலேமை விட்டுப் புறப்பட்டு, சமாரியாவுக்குச் சென்றார். கர்த்தருக்குப் பல பதில்செயல்களை விளைவிக்கும் மாபெரும் புத்துயிர்ப்புடன் கூடிய பிரசங்கம் செய்யும்படியாகவே அவர் அங்கு சென்றார் (அப். 8:5, 6). தூதன் ஒருவர் அழைத்ததால் அவர் (பிலிப்பு) அந்த மாபெரும் ஊழியத்தை விட்டுச் சென்று, எத்தியோப்பிய மந்திரி ஒருவரின் இரதத்துடன் சேர்ந்து கொண்டபொழுது அவர் இன்னுமொரு மாபெரும் வாய்ப்பைக் கண்டடைந்து "இயேசுவைக் குறித்து அவருக்குப் பிரசங்கித்தார்" (அப். 8:26-35). அடுத்ததாக, ஆசோத் என்ற ஊரில் பிரசங்கித்து, செசரியாவுக்குச் செல்லும் வழியில் இருந்த*

*எல்லா நகரங்களிலும் தொடர்ந்து பிரசங்கித்தார் (அப். 8:40). சில வருடங்களுக்குப் பிறகும் கூட அவர் செசரியாவில் இன்னமும் ஊழியக்காரராக இருந்தார் என்று பதிவு செய்யப் பட்டுள்ளது; தீர்க்கதரிசனம் சொல்லுகிற நான்கு மகள்கள் அவருக்கு இருந்தார்கள். பவுலின் மூன்றாம் ஊழியப் பயணத் தின் முடிவில் அவர் பவுலையும் அவரது துணையாளர்களையும் அவர்கள் திரும்பி வந்தபோது உபசரித்தார் (அப். 21:8). அவரது வாழ்வு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.*

*தர்சுப் பட்டணத்துச் சவுல் தாம் செய்திருந்த எல்லா வற்றாலும் கிறிஸ்துவின் சிலுவைக்குத் தனிச்சிறப்பான சேவகர் களில் ஒருவர் ஆனார் (அப். 9:27-29). முன்பு அவர் கிறிஸ்தவர் களைத் துன்புறுத்துவதில் வல்லவராய் இருந்தார் (அப். 7:58; 8:1; 9:21). இயேசுவை கிறிஸ்து என்று ஏற்று, ஒப்புக் கொடுக்க அவர் செய்த முடிவானது ஆதி சபையின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினால் தம்மைத் தேவ குமாரன் என்று நிரூபித்த விடையளிக்க முடியாத சத்தியத்தைத் தவிர வேறு எது அவரது மனதை மாற்றியிருக்கக் கூடும் (ரோமர் 1:4)? துன்புறுத்திய இந்த மனிதரின் மனமாற்றத்திற்குப் பிறகு பலஸ்தீனத்தின் மூன்று மாகாணங்களிலும் இருந்த சபைகள் சமாதானம் பெற்று, விரைவில் வளர்ச்சியடைய முடிந்தது என்று லூக்கா பதிவு செய்தார் (அப். 9:31). சவுல் தம்மை இயேசு வுக்கு ஒப்புக் கொடுத்த விஷயமானது ஆதி சபையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தியது!*

*யோப்பாவில் இருந்த "நற்செயல்களின்" பெண்மணியாகிய தொற்காள் மற்றவர்களைக் கவனிப்பதில் அமைதியான மேன்மையானதொரு ஒப்புக் கொடுத்தலைக் காண்பித்தார் கள். அப்பெண்மணி, கவனித்துக் கொள்ளும் தன்னுடைய திறமைகளை கர்த்தருக்கு ஊழியம் செய்வதில், பலரால் தனது பெயர் மதிக்கப்படவும் கூடிய வகையில் ஒப்புக் கொடுத்திருந் தார்கள் (அப். 9:36-39). கர்த்தருக்கு அவர் தம்மை ஒப்புக் கொடுத்த விஷயமானது அவரது மரணத்திற்குப்பின் அவரது ஊழியம் மற்றும் பெருந்தன்மையினால் உண்டான தெளிவாய் அறியக் கூடிய விளைவுகளில் காணப்பட முடிந்தது.*

*இன்றைய நாட்களில் உள்ளவர்களில் கூட சிலர் மட்டுமே தங்கள் ஒழுக்க நடத்தைகளை ஒப்பிட்டு நோக்கத் துணியு*

மளவுக்கு கொர்நேலியு மிக நல்லவராக, ஒழுக்கமுள்ள மனிதராக இருந்தார் (அப். 10:1, 2, 22). கர்த்தருக்கென்று மனம் மாற்றப்பட்ட முதல் புறஜாதியாராக அவர் இருந்தார், அவரது மனமாற்றமானது இனமேன்மை பாராட்டுதலை உடைத் தெறிய இயேசு என்ன செய்திருந்தார் என்பதற்கு நிலையான தொரு அடையாளமாய் உள்ளது.

செர்கியு பவுல் என்பவர் ஒரு அரசாங்கத் தலைவராக, சீப்புரு தீவில் இருந்த பாப்போ பட்டணத்தின் அதிபதியாக இருந்தார். மந்திரவாதியாகிய எலிமா வஞ்சிக்கிறவனாகவும், பவுலின் ஊழியத்தை எதிர்த்து நின்று கள்ளத்தனம் புரிந்த தாலும் அவனைப் பவுல் தற்காலிகமாய்ப் பார்வையற்றுப் போகச் செய்ததை செர்கியு பவுல் கண்ட பொழுது, தம்மைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார் (அப். 13:6-12).

தியத்தீரா ஊராளாகிய வியாபாரம் செய்யும் பெண்மணி யான லீதியாள் பிலிப்பி பட்டணத்திற்கு வந்த பொழுது, ஜெபிக்கும் இடத்தில் பவுலைச் சந்தித்தாள். ஏற்கனவே தேவனை ஆராதிப்பவளாயிருந்த அவள் விரைவாகச் சத்தியத் திற்குக் கீழ்ப்படிந்து, பிறகு பவுலையும் அவரது துணையாளர் களையும் தனது உபசரிப்பை ஏற்றுக் கொள்ளும்படி இசையச் செய்தாள் (அப். 16:13-15). அவளது பெருந்தன்மையும் மற்றும் உபசரிப்பும் அவளது ஒப்புக் கொடுத்தலுக்கான ஆதாரமாய் இருந்தன.

பிலிப்பிப் பட்டணத்தின் சிறையதிகாரி தம் வாழ்வை முற்றிலுமாகத் திருப்பி, தம் முழுக் குடும்பத்தையும் கிறிஸ்தவர் களாகும்படி வழி நடத்தினார் (அப். 16:27-34). தம்முடைய கைதிகளாயிருந்து, அடிக்கப்பட்டிருந்த பவுல் மற்றும் சீலா ஆகியோர் மீது அவர் உடனடியாகக் காண்பித்த அக்கறை மற்றும் கவனிப்பு ஆகியவை அவருடைய மனந்திரும்புதலைக் காண்பித்தன. அவர்களை அவர் தம்முடைய சொந்த வீட்டிற்கு அழைத்து வந்து, அவர்களைக் கவனித்து, உணவளித்தார்.

கொரிந்துவில் இருந்த ஜெப ஆலயத்தின் தலைவரான கிறிஸ்பு என்ற யூதர், தம் சக யூதர்கள் தேவதூஷணம் கூறியதை எதிர்த்து நிற்பதற்குப் பவுலுடன் இணைந்துகொண்டார். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவது என்ற தமது முடிவில் அவர் முதலாவது தனிமைப்பட்டிருந்தாலும், பிறகு கிறிஸ்துவுக் கென்று அவர் மனம் மாறிய நிகழ்ச்சியானது கொரிந்தியர்களில்

மற்றும் பலரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்படி தூண்டியது என்று லூக்கா மறைமுகமாகக் குறிப்பிட்டார் (அப். 18:8). ஜெப ஆலய அதிகாரியான இப்படிப்பட்ட ஒருவர் எவ்வளவு பிரசித்தி பெற்றவராய் இருந்திருப்பார் என்பதை ஒருவர் நினைவு கூர வேண்டும்; கிறிஸ்துவுக்கு அவர் தம்மை ஒப்புக்கொடுத்தது கொரிந்துவில் இருந்த யூத சமூகம் முழு வதிலும் சிதறச் செய்யும் செயலாக்கத்தை ஏற்படுத்தி யிருந்திருக்கும்.

மேலும் அறிவுறுத்தல் தேவைப்பட்டிருந்த அப்பொல்லோ என்ற பெயருடைய ஒரு போதகரைப் பற்றியும் நடபடிகள் நமக்குக் கூறுகின்றது. யோவான் ஸ்நானனுடைய போதனை யினால் மனம் மாறியிருந்த அவர் சத்தியத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கினார். சபை நிலைநாட்டப்பட்ட பிறகு யோவான் ஸ்நானனுடைய போதனையானது சரியானதாயிருக்கவில்லை, ஏனென்றால் இயேசு மரணம் அடைந்து மற்றும் அவரது இராஜ்யம் - கர்த்தருடைய சபை - பூமியின்மேல் தனது ஆளுகையைத் தொடங்கியிருந்தது (அப். 18:24, 25). எபேசுவில் அப்பொல்லோவின் ஊழியமானது, பன்னிரெண்டு மனிதர் களை இனியும் செல்லுபடியாகாதிருந்த யோவானின் ஞானஸ்நானம் பெற்றதுடன் விட்டுச் சென்றிருந்தது. அந்த மனிதர்களைப் பவுல் கிறிஸ்துவுக்குள் முழுக்காட்டி, கிறிஸ்து கட்டளையிட்டிருந்த ஞானஸ்நானத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.[1] அவர்கள் முதலில் பெற்றிருந்த ஞானஸ்நான மானது செல்லாததாகவும், காலம் தப்பியதாகவும் இருந்தது, அது ஆவிக்குரிய வகையில் அவர்களுக்கு ஒன்றும் செய்யாத தாயிருந்தது. எபேசுவில் ஏதாவதொரு விதமான இயேசுவின் சீஷர்களைக் கண்டது பவுலுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது, ஏனெனில் அவர்தான் எந்த ஒரு நகரத்திலும் சுவிசேஷத்துடன் முதலில் பிரவேசிப்பவராக இருந்தார். அவர்கள் பரிசுத்த ஆவியானவரை அறியாதிருந்தார்கள் என்று பவுல் அறிந்த பொழுது, அவர்களின் ஞானஸ்நானத்தைப் பற்றி அவர் விசாரித்தார் (அப். 19:1-7). அந்தப் பன்னிரெண்டு மனிதர் களைச் சரியாக ஞானஸ்நானப்படுத்தி, அவர்களைத் திருத்தியதன் மூலம் அவர்களின் வாழ்வில் புதிய பிறப்பை அவர்களுடைய ஜீவியத்திற்குள் கொண்டு வந்தார்.

பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அப்பொல்லோவுடன்

*பழக்கப்பட்டபோது, அவர் இன்னமும் யோவானின் ஞானஸ் நானம் என்ற பழைமையான உபதேசத்தைப் போதிப்பதை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அவரைத் தனியே அழைத்துக் கொண்டு போய், இன்னும் சரியாக அவருக்கு அறிவுறுத்தி, உடனடியாக அவரது உபதேசத்தைக் காலத்திற்கேற்றதாய் ஆக்கினார்கள். அவர் கர்த்தருக்கென்று மதிப்பும் வல்லமையு முள்ள ஒரு பிரசங்கியாராகத் தொடர்ந்து செயல்பட்டார் (அப். 18:26-28).*

*ஒப்புக் கொடுத்தலுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக அப்பொல்லோ விளங்குகின்றார். தம்முடைய தவறு எதிர்க்கப் பட்டபோது, ஞானஸ்நானம் பற்றிய தமது போதனையை மாற்றிக் கொள்ள அவர் சித்தமுள்ளவராய் இருந்தார். எபேசு வில் இருந்த கிறிஸ்தவர்கள் “கிருபையினாலே” இரட்சிக்கப் பட்டிருந்ததாகப் பவுல் பின்னாளில் அவர்களுக்கு நினைப் பூட்டினார் (எபே. 2:8, 9); இருப்பினும், “கிருபையினாலே இரட்சிப்பு” என்ற முடிவானது ஒருவரின் ஞானஸ்நானத்தை மறுஞானஸ்நானம் பெறும் நிலைவரையிலும் கூடப் பரிசோதிப்பதை உள்ளடக்குதல் என்ற செயலுக்கு ஆதரவளிப் பதாகவே எபேசுவில் நடந்த நிகழ்ச்சி உள்ளது. சத்தியம் முன் வைக்கப் படுகையில் முன்பு கொண்டிருந்த கருத்துக்களில் உள்ள தவறு வெளிப் படுத்தப்படும்போது ஒருவர் தாம் போதிக்கும் உபதேசத்தை (சத்தியத்திற்கேற்ப) மாற்றிக் கொள்ள வேண்டியதையும் இது உள்ளடக்கியிருக்கின்றது.*

*பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் கர்த்தருடைய ஊழியத் தில் மறுபடி மறுபடி காணப்படுகின்றார்கள். முதலில் அவர்கள் பவுலுடன் கொரிந்துவில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டார்கள் (அப். 18:1-3). பின்பு, அவர்கள் எபேசுவில் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காகப் பவுலுடன் பயணமானார்கள் (அப். 18:18, 26). அங்கு இருக்கையில் அவர்கள் தங்கள் முன்னாளைய நண்பர் களை வாழ்த்துவதில் பவுலுடன் இணைந்தார்கள் (1 கொரி. 16:19). சில காலத்திற்குப் பிறகு அவர்கள் ரோமாபுரியில் ஊழியம் செய்தார்கள் (ரோமர் 16:3). இன்னும் பின்னாளில், பவுல் ரோமாபுரியில் தமது முதல் சிறையிருப்பில் இருந்த இரண்டாண்டு காலகட்டத்தில் (அப். 28:30, 31), தேவபக்தி யுள்ள இந்தத் தம்பதியர் எபேசுவுக்குத் திரும்பிவந்து தீமோத் தேயுவுடன் ஊழியம் செய்தார்கள் (2 தீமோ. 4:19).*

2 தீமோத்தேயு நிருபமானது பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்ட பின்பு எழுதப்பட்டதாகவே பெரும்பாலும் கருதப்படுவதால், புதிய ஏற்பாட்டில் ஆக்கில்லா பிரிஸ்கில்லாள் ஆகியோர் எபேசுவில் இருந்ததாகக் கூறப்படுவதே அவர்களைப் பற்றிய கடைசிக் குறிப்பாக உள்ளது. அவர்கள் பல இடங்களில் இருந்த சபைகளுக்குப் பயணம் செய்து ஈடுபாட்டுடன் செய்த ஊழிய மானது கர்த்தருடைய ஊழியத்தில் அவர்கள் கொண்டிருந்த மாபெரும் ஒப்புக் கொடுத்தலை விளக்கப்படுத்துகின்றது.

பவுல் ரோமாபுரிச் சிறையில் இருக்கையில் அவரை இரகசியமாய்ச் சந்தித்த நபர் ஒநேசிப்போரு என்பவராவார். பலர் தம்மை விட்டு விலகியிருந்த வேளையில் ஒநேசிப்போரு தம்மை வந்து பார்த்து "இளைப்பாற்றியதாக" ப் பவுல் கூறினார் ( 2 தீமோ. 1:15, 16). பெரும்பாலான வேளைகளில் பவுல் மற்ற சகோதரர்களைக் காணச்சென்று அவர்களுக்குத் தைரியம் கூறியிருக்க, ஒநேசிப்போருவால் பவுலுக்குத் தைரியம் கொடுக்க முடிந்திருந்தது. பவுலைக் காண்பதற்கு ஒநேசிப் போரு தேடியலைய வேண்டியிருந்தது, மற்றும் அவர் பவுல் சிறையில் இருந்ததை("என் விலங்கை")க் குறித்து வெட்கப்படா திருந்தார். மேலும், எபேசுவில் அவர் கர்த்தருக்கான தம் ஊழியத்திற்காய் நன்கு அறியப்பட்டிருந்தார் (2 தீமோ. 1:17, 18). இது தைரியமான ஒப்புக் கொடுத்தலுக்கான இன்னொரு உதாரணம் ஆகும்.

## முடிவுரை

நடபடிகள் என்பது உடன்பாடு மற்றும் வசதியின் புத்தக மாயிராமல், தைரியம் மற்றும் ஒப்புக் கொடுத்தலின் புத்தக மாய் இருக்கின்றது! இது கிறிஸ்துவுக்கென்று நடந்த யுத்தத்தின் புத்தகமாகும்; காரணம் ஒன்றிற்காக ஒப்புக் கொடுத்தல் பற்றிய மனக்கிளர்ச்சியூட்டும் விபரங்களாகும். விலையேறப் பெற்றதாய், சில வேளைகளில் ஒருவர் தமது உயிரையே கொடுக்க வேண்டியதாய் இருந்தாலும் கூட, இயேசுவை உண்மையாய்ப் பின்பற்றுவதென்பது இப்புத்தகத்தில் முழுமையாய்ச் செயல் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. பிதா வாலும் அவரது குமாரனாலும் ஏற்கனவே செய்யப் பட்டிருந்த தியாகத்தைக் கவனிக்கையில், சீஷர்களுக்கு வேறு எந்தத்

*தியாகமும் பெரியதாய்க் காணப்படவில்லை. நடபடிகளில் உள்ள மனமாற்ற நிகழ்ச்சி ஒவ்வொன்றும் விலையேறிய ஒப்புக் கொடுத்தலாய் இருக்கின்றது. இயேசுவுக்கென்று ஒப்புக் கொடுத்தல் என்பது முதலில் தன்னைத்தான் வெறுப்பது என்று இயேசுவே கூறியிருந்தார் (மத். 16:24).*

*இயேசு, நமது மிகச் சிறந்தவைகளுக்கு குறைவான எதையும் ஏற்பதில்லை. அரைகுறைக் கிறிஸ்தவம் என்பது போதுமானதல்ல. கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்க ஒரு பகுதியும் உலகத்திற்கு ஒரு பகுதியுமாக இருதயமானது பிரிக்கப்பட முடியாது. உலக சிநேகமானது "தேவனுக்கு விரோதமான பகை"யாக உள்ளது (யாக். 4:4). முழு இருதயத்துடன் செய்வதென்பதே இயேசுவைப் பின்பற்றும் ஒரே வழியாகும், அது 100 சதவிகிதமாக, அவரது ஊழியத்திற்கென்று முற்றும் முழுமையும் ஒப்புக் கொடுத்தலாக இருக்க வேண்டும். தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்புகூருவதே இன்னமும் முதலாம் பிரதான கற்பனையாய் இருக்கின்றது (மத். 22:37, 38).*

---

குறிப்பு

[1]*அப்பொல்லோ பெற்றுக் கொண்ட ஞானஸ்நானமானது, அவர் யோவானின் ஞானஸ்நானம் பயன்படுத்தப்பட வேண்டிய காலத்தில் பெற்றுக் கொண்டதாயிருந்ததால் செல்லத் தக்கதாய் இருந்தது. பன்னிரெண்டு பேர் மறு ஞானஸ்நானப் படுத்தப்பட்டது பற்றிய குறிப்பிடுதலும், அப்பொல்லோ மறு ஞானஸ்நானப் படுத்தப்பட்டாரா என்பது பற்றி குறிப்பிடாதலும் ஆகிய இந்த சந்தர்ப்பப் பொருளானது தகுதியான வேளையில் யோவானின் ஞானஸ்நானத்தால் ஞானஸ்நானப் படுத்தப்பட்டவர்கள் அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளில் மறு ஞானஸ்நானம் பெறத் தேவையில்லை என்று முடிவு செய்யும்படி நம்மை வழி நடத்துகின்றது.*